**அம்பாறை மாவட்டத்தின் 29 கமநல சேவைக் குழுக்கள் - 2023**

---

## 1. கணக்காய்வு அபிப்பிராயம்

1.1 அம்பாறை மாவட்டத்தின் 29 கமநல சேவைக் குழுக்களின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு உரிய தகவல்களையும் உள்ளடக்கி நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் 58(1) ஆம் பிரிவு என்பவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

1.2 2023 ஆம் ஆண்டிற்குரிய அம்பாறை மாவட்டத்தின் 29 கமநல சேவைக் குழுக்களுக்குரியதாக விநியோகிக்கப்பட்ட 29 கணக்காய்வு அறிக்கைகள் விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் அந்த 29 கமநல சேவைக் குழுக்களுக்காகவும் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளியிடப்பட்டிருந்ததுடன் அதற்கான காரணங்களாக இருந்த பொருண்மையான குறைபாடுகள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 1.3 நிதிக்கூற்றுக்கள்

### 1.3.1 இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்கள், கணக்கீட்டுக் கொள்கைகளுக்கு இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| லகுகல மற்றும் பாலமுனை கமநல சேவைக் குழுக்களினால் நிதிக் கூற்றுக்களில் அடங்கி இருக்க வேண்டிய கூறுகளான உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று தயாரித்து நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டு முதல் அந்த உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று தயாரித்து சமர்ப்பிக்கப்படும் என தயவுடன் அறியத் தருகின்றோம். | சகல கூறுகளையும் உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தெஹியத்தகண்டி கமநல சேவைக் குழுவின் மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்ட உரிமை மூலதனங்கள் மீளாய்வாண்டு காலப் பகுதிக்கான மிகை ரூபா 10,591,246 காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் மிகை உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் குறிப்பிடப்படும். | நிதிக் கூற்றுக்கள் சரியாக தயாரித்து சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மடானகம மற்றும் பல்லன்ஓயா கமநல சேவைக் குழுக்களின் மீளாய்வாண்டின் நிலையான வைப்பு | எதிர்வரும் ஆண்டில் சரி செய்யப்படும். | மீளாய்வாண்டிற்குரிய பெறுவனவுகள் நிதிச் |

| | | | |
|---|---|---|---|
| | வட்டி ரூபா 542,976 மற்றும் நிலையான வைப்பு மீதி ரூபா 200,311 குறைத்து நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | | செயலாற்றல் கூற்றில் காண்பிக்கப்படல் வேண்டும். |
| (இ) | மாயாதுன்ன கமநல சேவைக் குழுவின் சோள பயிர்ச் செய்கைக்காக பயன்படுத்தப்பட்ட யூரியா உரத்தின் ஆரம்ப மீதி ரூபா 2,878,500 மற்றும் SSP உரம் இறுதி மீதி ரூபா 96,100 உர கணக்கிலும், நிதி நிலைமைக் கூற்றிலும் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சோள உர இறுதி மீதி ஒன்று இல்லாதிருந்தமையால் அதில் குறிப்பிடப்படவில்லை. SSP உரம் 31 மூட்டைகள் ஆண்டின் இறுதியில் நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் குறிப்பிடப்படாமல் அதில் விற்பனை தொகை செலுத்தும் அடிப்படையின் கீழ் தனியார் நிறுவனம் ஒன்றில் இருந்து பெறப்பட்டமையினால் ஆகும். | உர இருப்பின் ஆரம்ப மற்றும் இறுதி மீதிகள் உரக் கணக்கில் காண்பிக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | கமநல சேவை குழுக்கள் 06 இற்கு உரிய மீளாய்வாண்டின் இறுதியில் யூரியா, MOP மற்றும் TSP உர இருப்பின் பெறுமதி முறையே ரூபா 3,474,859 தொகை, ரூபா 6,097,033 மற்றும் ரூபா 59,280 நிதிக் கூற்றுக்களில் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டில் சரி செய்யப்படும். | உர இருப்பின் இறுதி மீதி சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (உ) | ஹிங்குரான மற்றும் பதியத்தலாவ கமநல சேவைக் குழுக்களில் மீளாய்வாண்டின் யூரியா உர இறுதி இருப்பின் பெறுமதி ரூபா 469,064 நிதிக் கூற்றுக்களில் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டில் சரி செய்யப்படும். | மேற்படி |
| (ஊ) | பல்லன்ஓயா கமநல சேவைக் குழுவின் மீளாய்வாண்டின் யூரியா மற்றும் MOP விற்பனைக்காக வியாபாரக் கணக்கு தயாரிக்கப்படாமல் இருந்ததுடன் அதற்குரிய விற்பனை வருமானம் மற்றும் இறக்கல் கூலி முறையே ரூபா 20,854,620 மற்றும் 235,410 | எதிர்வரும் ஆண்டில் சரி செய்யப்படும். | வியாபாரக் கணக்கில் அல்லது நிதிச் செயலாற்றல் கூற்றில் உரிய கொடுக்கல் வாங்கல்கள் காண்பிக்கப்படல் |

| | | | |
|---|---|---|---|
| | நிதிச் செயலாற்றல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | வேண்டும். |
| (எ) | பல்லன்ஓயா கமநல சேவைக் குழுவில் மீளாய்வாண்டில் யூரியா மற்றும் MOP கொள்வனவுச் செலவினம் ரூபா 51,141,836 நிதிச் செயலாற்றல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டில் சரி செய்யப்படும். | உரிய செலவினம் நிதிச் செயலாற்றல் கூற்றில் காண்பிக்கப்படல் வேண்டும். |
| (ஏ) | பதியத்தலாவ மற்றும் இறக்காமம் கமநல சேவைக் குழுக்களில் மீளாய்வாண்டில் யூரியா உர விற்பனைப் பெறுமதி யூரியா விற்பனைக் கணக்கில் ரூபா 12,029,524 அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2024.01.01 ஆம் திகதியில் ஆரம்ப திரண்ட நிதியத்தில் கழிப்பதற்கு இணங்குகின்றோம். | பெறுமதி சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஐ) | பதியத்தலாவ கமநல சேவை குழுவில் மீளாய்வாண்டில் யூரியா மற்றும் MOP விற்பனை வருமானம் ரூபா 4,964,078 மற்றும் உரிய உர நிறுவனத்திற்காக செலுத்தப்பட்ட ரூபா 10,994,439 காசுப் பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்வரும் ஆண்டு முதல் வருடாந்த அறிக்கை தயாரிக்கும் போது அந்த கணக்குகளில் இட்டு வருடாந்த அறிக்கை தயாரிப்பதற்கு இணங்குகின்றோம். | வருமானம் மற்றும் செலவினங்கள் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஒ) | அக்கரைப்பற்று கிழக்கு மற்றும் அக்கரைப்பற்று மேற்கு கமநல சேவைக் குழுக்களில் மீளாய்வாண்டில் MOP விற்பனைப் பெறுமதி ரூபா 479,139 வியாபாரக் கணக்கில் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டில் சரி செய்யப்படும். | பெறுமதி சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஓ) | லகுகல கமநல சேவைக் குழுவினால் மீளாய்வாண்டுக்கு உரிய MOP உரம் கிலோகிராம் 5,000 கொள்வனவுப் பெறுமதியான ரூபா 900,000 வியாபாரக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட எம்.ஓ.பீ கிலோகிராம் 5,000 2023/24 பெரும் போகத்தில் பகிர்ந்தளிப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்ட உரம் ஆகும். | பெறுமதிகள் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (ஔ) | பாணம கமநல சேவைக் குழுவிகனால் மீளாய்வாண்டில் MOP உரத்திற்காக செலுத்த வேண்டிய ரூபா 1,151,364 மற்றும் யூரியா உரத்திற்காக செலுத்த | விற்பனை செய்து பணம் செலுத்தும் அடிப்படையில் மானிய உரங்கள் விற்பனை செய்யப்பட்டமையால் | சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டிய ரூபா 122,884 குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2023.12.31 இல் உள்ளவாறு விற்பனை செய்யப்பட்ட காசுப் பெறுமதி மாத்திரம் செலுத்த வேண்டியதாகக் காண்பிக்கப்பட்டதுடன் எஞ்சியிருந்த உரத்தின் அளவு விற்பனை செய்யப்படாமல் இருந்தமையால் அப் பெறுமதி செலுத்த வேண்டியதாக குறிப்பிடப்படவில்லை. | |
| (க) | ஹிங்குரான மற்றும் சவளக்கடை கமநல சேவைக் குழுக்களில் சேதன உயிரியல் கரைசல் உரம் லீற்றர் 615 ரூபா 312,967 ஆன பெறுமதி நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டில் சரி செய்யப்படும். | இறுதி இருப்பு சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (கா) | 11 கமநல சேவைக் குழுக்களுக்கு கமநல அபிவிருத்தித் திணைக்களம் மற்றும் ஏனைய நிறுவனங்களினால் வழங்கப்பட்ட 336 நிலையான விடயங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | 2024 ஆம் ஆண்டில் சரி செய்யப்படும். | மதிப்பீட்டுப் பெறுமதியைப் பெற்று கணக்கீடு செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (கி) | லாகுகல கமநல சேவைக் குழுவினால் மீளாய்வாண்டில் கமநல வங்கிக் கடனின் கீழ் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்ட ரூபா 243,000 பெறுமதியான 10 ஸ்பிரே மெசின் நிலையான சொத்தாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டில் கமநல வங்கிக்காக கொள்வனவு செய்யப்பட்ட 10 ஸ்பிரே மெசின் நிலையான சொத்துக்களில் தவறுதலாக உள்ளடக்கப்பட்டதுடன் அந்த 10 மெசின்களை நிலையான சொத்துக்களில் இருந்து அகற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என தயவுடன் அறியத் தருகின்றோம். | குழுக்களுக்கு உரித்தற்ற சொத்துக்கள் கணக்கீடு செய்யாது இருந்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (கீ) | பொத்துவில் கமநல சேவைக் குழுவினால் குளங்களை திருத்துவதற்காக கிடைக்க வேண்டிய ரூபா 320,000 கணக்கீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | எதிர்வரும் ஆண்டில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | ஆண்டிற்குரிய பெற வேண்டிய மொத்தப் பெறுமதியும் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (கு) | 05 கமநல சேவைக் குழுக்களுக்கு உரிய நிதி நிலைமைக் கூற்றில் கிடைக்க வேண்டிய ஏக்கர் வரி ரூபா 967,531 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டின் போது அதனை சரி செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தயவுடன் அறியத் தருகின்றோம். | பெற வேண்டிய மொத்த ஏக்கர் வரித் தொகையும் சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (கூ) | சம்மாந்துறை கமநல சேவைக் குழுவினால் மீளாய்வாண்டில் காணி நிரப்பல்களுக்காக கிடைக்க வேண்டிய ரூபா 855,000 பெறுமதி கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்திற்கு செலுத்த வேண்டிய 40 சதவீத பெறுமதியான ரூபா 342,000 நிதி நிலைமைக் கூற்றில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கமநல அபிவிருத்தி ஆணையாளருக்கு செலுத்த வேண்டிய பெறுமதி சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும். |
| (கெ) | நிந்தவூர் கமநல சேவைக் குழுவினால் பாலமுனையில் அமைந்துள்ள விவசாயக் கல்லூரிக்கு 2017 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட டெக்டர், இழுவைப் பெட்டி, Nine Tine இழுவைப் பெட்டி, 04 தண்ணீர் பம்பிகள் மற்றும் 40 அடி நீரக் குழாய்கள் 04 இன் பெறுமதி கணக்குகளில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டின் போது கமநல சேவை பிரதி ஆணையாளரின் அங்கீகாரத்தைப் பெற்று அந்த பெறுமதிகளை கணக்குகளில் இருந்து அகற்றுவதற்குத் தேவையான மிகுதி நடவடிக்கைகள் எடுக்கப்படும். | பாலமுணை விவசாயக் கல்லூரிக்கு வழங்கப்பட்ட விடயங்களின் பெறுமதி முறையான பிரகாரம் கணக்குகளில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (கே) | உஹன கமநல சேவைக் குழுவைச் சுற்றி வேலி நிர்மாணிப்பதற்கான செயற்திட்டத்திற்காக கமநல சேவைக் குழுவின் நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்ட ரூபா 410,971 தொகை மூலதனமாக்கப்படாது இருந்ததுடன் செலுத்த வேண்டிய நிறுத்தி வைத்தல் தொகை ரூபா 41,097 தொகையும் கணக்கீடு | கமநல சேவைக் குழுவின் வேலி நிர்மாணித்தல் செயற்திட்டத்திற்காக கமநல சேவைக் குழுவில் இருந்து செலுத்த வேண்டிய நிறுத்தி வைத்தல் தொகையான ரூபா 41,097 தொகை | சபையின் நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்ட தொகை மூலதனம் ஆக்கப்பட்டு செலுத்த வேண்டிய நிறுத்தி வைத்தல் பணம் சரியாக கணக்கீடு |

| | | | |
|---|---|---|---|
| | செய்யப்பட்டிருக்கவில்லை. | கணக்கீடு செய்யப்படாமல் தவறு ஒன்றாக இருந்ததுடன் அடுத்து வரும் ஆண்டின் கணக்கு அறிக்கைகளில் சரி செய்யப்படும் என அறியத்தருகின்றோம். | செய்யப்படல் வேண்டும். |
| (கை) | 10 கமநல சேவைக் குழுக்களுக்கு உரிய காணிகளின் உரித்து கமநல சேவைக் குழுக்களுக்கு கையேற்று கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர் காலத்தில் கையேற்று கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரித்தைக் கையேற்று கணக்கீடு செய்வதற்கான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |

### 1.3.3 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பதியத்தலாவ கமநல சேவைக் குழுவிற்குரிய காசுப் பாய்ச்சல் கூற்றில் குறிப்பிடப்பட்டிருந்த கூட்டுப் பெறுமதி மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்றில் குறிப்பிட வேண்டிய சரியான கூற்றுப் பெறுமதிகளுக்கு இடையே ரூபா 7,027,368 இணக்கம் இன்மை காணப்பட்டது. | பழைய மீதியாகும். இது தொடர்பாக எழுத்து மூல சான்றுகள் காணப்படவில்லை. வருடாந்த அறிக்கைகளில் மாத்திரம் முன் கொண்டு வரப்பட்ட மீதியாகும். | இணக்கம் இன்மைகளுக்கு உரிய காரணங்களைக் கண்டறிந்து விரைவாக சரி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | பல்லன்ஓயா கமநல சேவைக் குழுவிற்குரிய மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 06 கணக்கு விடயங்களின் நிதிக் கூற்றுக்களின் பிரகாரமான பெறுமதி மற்றும் நேரொத்த அறிக்கையின் பிரகாரம் ஆன பெறுமதிகளுக்கு இடையே ரூபா 939,578 இணக்கம் இன்மை காணப்பட்டது. | சான்றுகள் காணப்படாது இருந்தமையால் அந்த மீதியைப் பதிவழிப்பதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | இந்த மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு அல்லது முறையான பிரகாரம் நடவடிக்கை எடுத்து பதிவழிப்பதற்கோ தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | பொத்துவில் கமநல சேவை குழுவினால் நிலையான வைப்பு கணக்கின் மீதி ரூபா 8,076,827 ஆகக் காண்பிக்கப்பட்டதுடன் வங்கியினால் அனுப்பப்பட்ட மீதி உறுதிப்படுத்தல் கடிதத்தின் பிரகாரம் பெறுமதி ரூபா | பதிலளிக்கப்படவில்லை. | இந்த மீதி தொடர்பாக பரீட்சித்து தீர்த்து வைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| 6,251,438 ஆக காணப்பிக்கப்பட்டதன் காரணமாக ரூபா 1,825,389 இணக்கம் இன்மை காணப்பட்டது. | | |

### 1.3.4 தொங்கல் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 03 கமநல சேவைக் குழுக்களுக்கு உரிய நிதிக் கூற்றுக்களில் 2018 மற்றும் 2021 ஆம் ஆண்டுகள் முதல் முன்கொண்டு வரப்படுகின்ற ரூபா 1,077,844 ஆன 03 தொங்கல் கணக்கு மீதிகளை சரி செய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் ஆண்டின் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தொங்கல் கணக்கிற்கு உரிய கொடுக்கல் வாங்கல்களை இனங்கண்டு சரி செய்தல் வேண்டும். |

### 1.3.5 கணக்காய்விற்கான எழுத்து மூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 25 கமநல சேவைக் குழுக்களுக்கு உரிய நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 166,529,914 ஆன சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மீதிகளைப் பரீட்சிப்பதற்காக போதியளவான சான்றுகள் மற்றும் மீதி உறுதிப்படுத்தல்கள் காணப்படாமையினால் கணக்காய்வின் போது திருப்திகரமாக உறுதிப்படுத்துதல்/ ஏற்றுக் கொள்ள முடியாதிருந்தது. | முன்னைய பல ஆண்டுகளில் இருந்து கொண்டு வரப்படுகின்ற அந்த சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கணக்கு விடயங்களுக்காக கணக்காய்விற்னு சமர்ப்பிப்பதற்காக நிலையத்திடம் சான்றிதழ் மற்றும் தகவல்கள் கண்டறிய முடியாமல் இருந்ததுடன் அந்த மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கான தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதுடன் 2024 ஆம் ஆண்டின் போது அந்த மீதிகளை கணக்கு அறிக்கைகளில் சரி செய்வதற்கு எதிர்பார்ப்பதாக எதிர்பார்க்கப்படுகின்றது என அறியத்தருகின்றோம். | உரிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கணக்கு மீதிகளை உறுதிப்படுத்து வதற்காக தேவையான சான்றுகள் மற்றும் தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

## 1.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டம் | | | |
| (i) 32 மற்றும் 33 ஆம் பிரிவுகள் | அட்டாளைச்சேனை கமநல சேவை அதிகாரப் பிரதேசத்தில் அனுமதியற்ற வகையில் நிரப்பப்பட்டிருந்த வயல் காணிகளில் 32 ஏக்கர்களுக்கு இடையே மீண்டும் பயிர் செய்வதற்கு நீதிமன்றக் கட்டளை வழங்கப்பட்ட 16 ஏக்கர் அளவில் பயிர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | 2024 ஆம் ஆண்டின் போது உரிய காணிகளில் பயிர் செய்யாத விவசாயிகளுக்கு மீண்டும் வழக்குத் தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அந்த வயற் காணிகளில் 16 ஏக்கர் அளவில் பயிர் செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) 53(1) ஆம் பிரிவு | 15 கமநல சேவைக் குழுக்களுக்கு 2020 முதல் 2022 வரை வயல் காணிகள் பெயர் பதிவேட்டைத் திருத்துவதற்காக 3,336 விண்ணப்பங்கள் கிடைத்திருந்த போதிலும் 1,149 விண்ணப்பங்களுக் காக மாத்திரமே திருத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேவையான திருத்தங்கள் விரைவாக மேற்கொள்ளப்படல் வேண்டும். |
| (iii) 55(1) ஆம் பிரிவு | பல்லன் ஓயா கமநல சேவை அதிகாரப் பிரதேசத்தில் விவசாயக் காணிகளுக்கு உரிய முதலாவது பட்டோலை ஆணையாளர் நாயகத்தால் உறுதிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்பட வில்லை. | சட்டத்தின் பிரகாரம் உரிய பட்டோலைகள் ஆணையாளர் நாயகத்தால் உறுதிப்படுத்தப் படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 110 | 18 கமநல சேவைக் குழுக்களுக்கு உரிய நிதிப்பிரமானங்களின் பிரகாரம் இழப்புக்கள் மற்றும் நட்டப் பதிவேடு பேணிச் செல்லப்பட்டிருக்க வில்லை. | இழப்பு மற்றும் நட்டப் பதிவேடு ஒன்று பேணிச் செல்வதற்கு இணங்குகின்றோம். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | நிதிப்பிரமாணம் 138 | பல்லன் ஓயா கமநல சேவைக் குழுவின் ரூபா 123,091 பெறுமதியான 12 உறுதிச்சீட்டுக் களுக்காக கமநல சேவைக் குழுவின் நிறைவேற்று செயலாளரின் உறுதிப்படுத்தலுடன் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | பதிலளிக்கப்பட வில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iii) | நிதிப்பிரமாணம் 139 | நாமல்தலாவ மற்றும் பல்லன்ஓயா கமநல சேவைக் குழுக்களில் ரூபா 337,239 பெறுமதியான 11 உறுதிச்சீட்டுக்களுக்கு உரிய காசோலை அல்லது காசு கையேற்ற நபரினால் காசோலை அல்லது காசு கையேற்கப்பட்டமைக்கான கையொப்பம் இடப்பட்டிருக்க வில்லை. | பதிலளிக்கப்பட வில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | நிதிப்பிரமாணம் 316 | அரசாங்கத்தின் பணம் மற்றும் நிதிப் பெறுமதியைக் காண்பிக்கின்ற படிவம் அல்லது விண்ணப்பம் பயன்படுத்தி நிறுவனத்தால் அந்த தொகை அல்லது பத்திரம் பாதுகாப்பாக காப்பகம் ஒன்றில் அல்லது பாதுகாப்பான பெட்டி ஒன்றில் அல்லது பாதுகாப்பான அறை ஒன்றில் வைப்புச் செய்ய | எதிர்காலத்தில் காப்பகத்தில் அல்லது பாதுகாப்பான பெட்டியில் காசு மற்றும் நிதிப் பத்திரங்களை வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வேண்டி இருந்த போதிலும் மகாஓயா மற்றும் லகுகல கமநல வங்கிகளினால் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | | |
| (v) | நிதிப்பிரமாணம் 395(அ) | மாயாதுன்ன கமநல சேவைக் குழுவினால் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கிக் கணக்கு ஒன்றிற்காக வங்கி இணக்கக் கூற்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 2162724 என்ற குழு கணக்கிற்காக வங்கி இணக்கக்கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (vi) | நிதிப்பிரமாணம் 396(ஈ) | 04 கமநல சேவைக் குழுக்களால் விநியோகிக்கப்பட்ட போதும் கொடுப்பனவிற்காக வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாத 02 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தை விஞ்சிய ரூபா 656,487 பெறுமதியான காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | இந்த காசோலை தொடர்பாக எதிர்காலத்தில் நிதிப்பிரமானங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படும் என தயவுடன் அறியத்தருகின்றறோம். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (vii) | நிதிப்பிரமானம் 452 | 04 கமநல சேவைக் குழுக்கள் நிதிப்பிரமானத்தின் பிரகாரம் கணக்காய்வு ஐயவினாப் பதிவேடு ஒன்றை பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரியான முறையில் கணக்காய்வு ஐயவினா பதிவேடு தயாரித்து பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தயவுடன் அறியத்தருகின்றோம். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (viii) | நிதிப்பிரமாணம் 502(2) | 13 கமநல சேவைக் குழுக்கள் உரிய நிதிப்பிரமானத்தின் பிரகாரம் நிலையான சொத்து பதிவேடு ஒன்றைப் பேணிச் சென்றிருக்கவில்லை. | நிலையான சொத்துப் பதிவேடு தயாரித்து பேணிச் செல்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என தயவுடன் அறியத் | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | தருகின்றோம். | |
| (இ) | கமநல அபிவிருத்தி ஆணையாளரின் சுற்றறிக்கை மற்றும் கடிதம் | | | |
| (i) | 1981 ஒக்தோபர் 16 ஆந் திகதி இலக்கம் 107 என்ற சுற்றறிக்கை 30(2) ஆம் பந்தி | 06 கமநல சேவை குழுக்களுக்கு உரிய சொத்துக்கள் மற்றும் கடன் மீதிகளை உறுதிப்படுத்துவதற் காக கடன் வழங்குனரிடம் இருந்து மற்றும் கடன் உரிமையாளர்களிடம் இருந்தும் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ் பெற வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு உறுதிப்படுத்தும் சான்றிதழ் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகள் உறுதிப்படுத்தி பெறப்படல் வேண்டும். |
| (ii) | 2020 யூன் 25 ஆந் திகதிய இலக்கம் 08/2020 என்ற கமநல அபிவிருத்தி ஆணையாளரின் சுற்றறிக்கை | 04 கமநல சேவைக் குழுக்களுக்கு உரிய 08 உத்தியோகத்தர்க ளால் பிணை வைப்பு வைக்கப்பட்டிருக்க வில்லை. | உரிய உத்தியோகத்தர்களுக்க ாக எதிர் காலத்தில் பிணை வைப்புப் பணம் வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பிணை வைப்புக்களை வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவை 2006 2.4 ஆம் பிரிவு | 10 கமநல சேவைக் குழுக்களால் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 4,929,796 பெறுமதியான உபகரணங்கள் தொடர்பாக தொழில் நுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | 2024 ஆம் ஆண்டில் சரி செய்யப்படும். | சகல பெறுகை நடவடிக்கைகளும் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் மேற்கொள்ளப் படல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (உ) | 2014 ஆகஸ்ட் 22 ஆந் திகதிய இலக்கம் 07/2014 (107 திருத்தம் iii) என்ற சுற்றறிக்கை | மகாஓயா கமநல சேவைக் குழுவில் நாளாந்தம் கையில் வைத்திருக்கக் கூடிய ஆகக் கூடிய தொகை ரூபா 10,000 ஆக இருந்த போதிலும் அதற்கு முரணாக 2023 ஆம் ஆண்டின் ஒக்தோபர் முதல் திசெம்பர் வரையான காலத்தில் 46 சந்தர்ப்பங்களின் போது ரூபா 10,172 முதல் ரூபா 442,768 வரையான வீச்சில் காசு கையில் வைக்கப்பட்டிருந்தது. | நிலையத்தின் முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர் நிலையத்தில் இரண்டு நிலையத்தில் நடவடிக்கைகள் செயற்படுகின்றமையின ால் நிலையத்தில் இல்லாத ஒவ்வொரு நாளிலும் பணம் வங்கியில் இடுவதற்கு முடியாதுள்ளது. கணிசமான விவசாயிகளின் எண்ணிக்கையில் உரம் கொள்வனவு செய்வதற்கு வருகை தருகின்றமை இந்த பிரச்சனைக்கான காரணமாக இருந்தது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் 2023 மே 16 ஆந் திகதிய 7/7/கு.இ.லே.பிரதி/2023 என்ற கடிதம் | மகா ஓயா மற்றும் தெஹியத்த கண்டி கமநல சேவைக் குழுக்களில் 2023 மே 31 ஆந் திகதி வரையில் Geo Goviya நிகழ்ச்சித் திட்டம் பூர்த்தி செய்ய வேண்டியிருந்த போதிலும் 12,572 விவசாயிகள் பதிவு செய்யப்பட்டு (PLR) பதிவு செய்யப்படாது இருந்ததுடன் காணிகளில் அட்சரிகை மற்றும் தீர்க்கறைகை அளவுத் திட்டத்தில் (KML) 14,237 அளவிடப்பட்டிருக்க வில்லை. | போதியளவான பதவியணியினர் காணப்படாமையினால் Geo Goviya நிகழ்ச்சித் திட்டத்தை குறித்துரைத்த நேரத்தில் பூர்த்தி செய்ய முடியாதிருந்தது. | குறித்துரைத்த திகதியில் நிகழ்ச்சித் திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாமை தொடர்பாக பரீட்சித்து அல்லது நிகழ்ச்சித் திட்டத்தை விரைவுபடுத்துவதற்க ான திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட ல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

அம்பாறை மாவட்டத்திற்குரிய 29 கமநல சேவைக் குழுக்களுக்கு உரிய மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 60,486,043 இலாபமாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 25,639,124 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 34,846,919 அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு கமநல சேவைக் குழுக்களில் நிலையான வைப்பு வட்டி வருமானம் உயர்வடைந்து சென்றமையும், ஏக்கர் வரி வருமானம் மற்றும் எனைய வருமானம் உயர்வடைந்து சென்றமையும் பிரதான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 06 கமநல சேவைக் குழுக்களுக்கு உரியதாக 2020 ஆம் ஆண்டின் போது ரூபா 964,948 செலவினம் செய்து உற்பத்தி செய்யப்பட்ட கூட்டுப்பசளை இருப்பு விவசாயிகளுக்கு விற்பனை செய்யப்படாமல் செயற்குழு நிலத்தில் குவித்து வைக்கப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கூட்டுப் பசளை உற்பத்திக்காக ஏற்பட்ட செலவிடப்பட்ட செலவினம் அல்லது மேவுகை செய்யும் வகையில் விற்பனை நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கமநல அபிவிருத்தித் திணைக்களம் அம்பாறை மாவட்ட அலுவலகத்தால் 2008, 2010 மற்றும் 2012 ஆம் ஆண்டு கால எல்லையில் தவணைப் பணம் செலுத்தும் அடிப்படையில் 08 கமநல சேவை குழுக்களுக்கு வழங்கப்பட்டிருந்த 71 கை உழவு இயந்திரத்திற்காக 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் ரூபா 9,342,034 தொகை மேலும் தீர்த்து வைக்க வேண்டி இருந்தது. | எதிர்காலத்தில் அறவிடுவதற்கும், செலுத்துதலைப் புறக்கணிக்கின்றவர்களுக்கு சட்ட ரீதியான நடவடிக்கைகளும் எடுக்கப்படும். | நிலவைத் தவணைப் பணத்தை அறவிடுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 27 கமநல சேவை குழுக்களுக்கு உரிய 03 வருடங்கள் முதல் 23 வருட காலப்பகுதியில் பல்வேறு தரப்பினரிடம் இருந்து கிடைக்க வேண்டியதாகக் காணப்படுகின்ற ரூபா 179,635,528 பெறுமதியை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | இந்த பெற வேண்டிய மீதிகளை அறவிடுவதற்கோ அல்லது பதிவழிப்பதற்கோ தேவையான நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட செயலகம் - அம்பாறை பிரதான அலுவலத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | உரிய நிதியினை அறவிடுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 26 கமநல சேவைக் குழுக்களுக்கு உரிய 05 வருடங்கள் முதல் 26 வருடங்கள் வரையிலான கால வீச்சில் முன்கொண்டு வரப்படுகின்ற ரூபா 282,143,854 ஆன செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | சில மீதிகளுக்கான தகவல்கள் காணப்படாதிருந்ததுடன் கண்டறியக் கூடிய மீதிகள் எதிர்காலத்தில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | மகாஓயா கமநல சேவைக் குழுவிற்குச் சொந்தமான ரூபா 685,645 மீதியுடன் இரண்டு சேமிப்புக் கணக்குகள் 02 வருடங்கள் முதல் 03 வருடங்கள் வரையிலான காலத்தில் இருந்து எந்த ஒரு கொடுக்கல் வாங்கல்களும் இல்லாது இருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் அந்த சேமிப்புக் கணக்குகளின் தேவை ஒன்று காணப்படாதிருக்குமாயின் அவற்றில் காணப்படுகின்ற பணத்தை நிலையான வைப்பு ஒன்றில் முதலீடு செய்து வட்டி வருமானத்தை உழைப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | இந்த பணம் நடைமுறைக் கணக்கில் வைக்கப்படாமல் சேமிப்புக் கணக்கில் வட்டி பெறுகின்றமையினாலேயே வைக்கப்பட்டுள்ளது. எதிர் காலத்தில் நிலையான வைப்பில் வைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | முறையான அங்கீகாரத்தின் கீழ் ஆகக் கூடிய வட்டி வருமானத்தைப் பெறக் கூடிய வகையில் வைப்பு ஒன்றில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | மகாஓயா கமநல சேவை குழுவிற்குச் சொந்தமான ரூபா 3,805,000 பெறுமதியான 04 நிலையான வைப்புக்களுக்கு உரிய ஒவ்வொரு நிலையான வைப்பினதும் பெறுமதி மற்றும் வட்டி வருமானத்தை குறிப்பிடுவதற்காக முறையான பதிவேடு ஒன்று பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிலையான வைப்பு பதிவேடு ஒன்று பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலையான வைப்பு பதிவேடு ஒன்றைப் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | மகா ஓயா கமநல சேவை குழுவினால் பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகளில் உள்ளடக்கப்பட்ட கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் பதிவேடுகள் தயாரித்து பயன் படுத்தப்பட்டிருக்கவில்லை. | எதிர் காலத்தில் கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் பதிவேடு ஒன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் பதிவேடு பேணிச் செல்லப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | மகாஓயா மற்றும் தெஹியத்தகண்டி கமநல சேவைக் குழுக்களுக்குசட சொந்தமான நிலையான சொத்துக்களில் உள்ளடக்கி நிலையான சொத்துப் பதிவேடு தயாரித்து பயன்படுத்தப்படாது இருந்ததுடன் ஒவ்வொரு சொத்து வகைகளின் கீழ் உள்ளடக்கப்பட்ட சொத்து விடயங்கள் தனித்தனியாக பட்டோலைகள் தயாரிக்காமல் கூட்டுப்பெறுமதிக்கே பெறுமானத் தேய்வு கணிப்பிடப்பட்டு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டதன் காரணமாக பெறுமானத் தேய்வு முடிவடைந்த சொத்துக்களை இனங்கண்டு அவற்றை அகற்றுவதற்கு முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | எதிர்காலத்தில் நிலையான சொத்துப் பதிவேடு ஒன்று பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலையான சொத்துப் பதிவேடு நாளது வரையாக பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஏ) | நெல் கொள்வனவு செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நெல் ஆலை உரிமையாளர்களுக்கு விநியோகிக்கப்பட்ட நெல்லுக்காக 2013 ஆம் ஆண்டு முதல் உஹன கமநல சேவைக் குழுவிற்கு அறவிட வேண்டிய ரூபா 1,408,825 பெறுமதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நெல் கொள்வனவு செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நெல் ஆலை உரிமையாளர்களுக்கு விநியோகிக்கப்பட்ட நெல்லுக்காக 2013 ஆம் ஆண்டு முதல் அறவிட வேண்டிய ரூபா 1,408,825 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை தொடர்பாக தற்போது வழக்கு நடவடிக்கைகள் நடாத்தப்படுவதுடன் அதன் மூலம் அந்த பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத் தருகின்றோம். | உரிய பணத்தை அறவிடுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஐ) | உஹன கமநல சேவைக் குழுவினால் 2011 ஆம் ஆண்டு முதல் 2015 வரையான காலப் பகுதியில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 199,675 பெறுமதியான விவசாய இரசாயன இருப்பு மற்றும் 2004 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறுமதி ரூபா 83,445 ஆன காலாவதியான விவசாய இரசாயண இருப்பு மற்றும் ரூபா 76,977 ஆன தெங்கு உர இருப்பு கைதவிர்க்கும் குழுவினால் பரீட்சிக்கப்பட்டு அகற்றும் நடவடிக்கைகள் | தேவையான நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 76,977 பெறுமதியான தெங்கு உர இருப்பு காலாவதியாகி இருந்த போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அந்த இருப்பினை அகற்றுவதற்கோ அல்லது வேறு நடவடிக்கைகளோ எடுக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர் காலத்தில் மேற்கொள்வதற்காக பிரதான அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | |
| (ஒ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 20 வருடங்களுக்கு அண்ணளவான காலம் கடந்திருந்த 2003 ஆம் ஆண்டில் விவசாய வங்கி கடன் மீதி பட்டியலில் காண்பிக்கப்பட்டுள்ள சுழற்சிக் கடன் ரூபா 445,802 மற்றும் கையில் உள்ள காசு மீதி பற்றாக்குறையாகக் காண்பிக்கப்பட்ட ரூபா 93,035 என்பவற்றை தீர்த்து வைப்பதற்கு நாமல்தலாவ கமநல சேவை குழுவினால் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | மீதிகளை தீர்த்து வைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்படல் வேண்டும். |
| (ஓ) | பள்ளன்ஓயா கமநல சேவைக் குழுவின் முன்னாள் எழுவினைஞரிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 500,226 பெறுமதி ஒன்று 2011 ஆம் முதல் கணக்கு அறிக்கைகளில் குறிப்பிடப்பட்ட போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்தப் பணத்தை அறவிடுவதற்கு எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | உரிய பணத்தை அறவிடுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஔ) | 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளின் போது வரையறுக்கப்பட்ட லங்கா உரக் கம்பனியினால் 14 கமநல சேவைக் குழுக்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 14,7693,573 பெறுமதியான கூட்டுத்தாபன பெயரை உடைய கரைசல் உரம் இருப்பு காலாவதியாகி இருந்ததுடன் அவை தொடர்பாக எந்த ஒரு நடவடிக்கையும் | இந்த இருப்பை அகற்றுமாறு உரிய உரக் கம்பனிக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் அகற்றும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். | காலாவதியான உரத்தை அகற்றுதல் அல்லது நட்டம் ஏற்படும் ஆயின் அது தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எடுக்காமல் சபையில் வைக்கப்பட்டிருந்தது. | | |
| (க) | நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட ரூபா 1,634,691 பெறுமதியான காலாவதியான மற்றும் பாதிப்படைந்த இருப்பு மீதி தொடர்பாக தேவையான நடவடிக்கைகள் எடுத்து உரிய நிறுவனங்களுக்குக் கையளிப்பதற்கோ அல்லது பதிவேடுகளில் இருந்து அகற்றுவதற்கோ தெஹியத்த கண்டி கமநல சேவைக் குழுவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காலாவதியான மரக்கறி விதைகள், முருங்கைக் கன்றுகள், காலாவதியான நாற்றுக்கள், காலாவதியான விவசாய இரசாயண பொருட்கள் தொடர்பாக பரிசோதனைகள் நடாத்தப்பட்டுள்ளதுடன் அந்த அறிக்கை இதுவரை கிடைத்திருக்கவில்லை. அறிக்கை கிடைத்த பின்னர் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய நிறுவனங்களுக்கு மீளக் கையளிப்பதற்கோ அல்லது முறையான பிரகாரம் அகற்றுவதற்கோ நடவடிக்கைகள் விரைவாக எடுத்தல் வேண்டும். |
| (கா) | கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளரை 2006 யூன் 14 ஆந் திகதிய இலக்கம் 7/5/6/வி.வி/அ.க என்ற கடிதத்தின் இலக்கம் 4 ஆம் பந்தியின் பிரகாரம் 03 கமநல சேவை குழுக்களுக்கு உரியதாக வருடாந்தம் அறவிடப்படுகின்ற ஏக்கர் வரி நிதியாண்டின் மார்ச் 31 ஆந் திகதி வரையில் அறவிடல் பூர்த்தி செய்ய வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கடந்த ஆண்டுகளுக்கு உரிய ரூபா 3,452,001 ஏக்கர் வரி பெறுமதி அறவிட வேண்டிக் காணப்பட்டது. | 2024 ஆம் ஆண்டில் சரி செய்யப்படும். | கடந்த ஆண்டுகளுக்கு உரிய அறவிட வேண்டியதாகக் காணப்படுகின்ற ஏக்கர் வரிப் பெறுமதியை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (கி) | 2022 ஆம் ஆண்டின் போது பயோ புட்ஸ் தனியார் கம்பனியால் மகாஓயா கமநல சேவை குழுவிற்கு வழங்கப்பட்டிருந்த நைட்ரோ பிளஸ் கரைசல் உரம் லீற்றர் 7672 இருப்பு காலாவதியாகி இருந்ததுடன் அந்த இருப்பை மீண்டும் உரிய கம்பனிக்கு கையளிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பயோ புட்ஸ் கம்பனிக்கு இது தொடர்பாக அறிவிக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காலாவதியான இருப்புக்கள் உரிய கம்பனிக்கு மீண்டும் கையளிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (கீ) | 15 கமநல சேவைக் குழுக்களினால் கமநல சேவைக் குழுக்கள் மற்றும் கமநல வங்கிகளுக்காக மென்பொருள் கொள்வனவு செய்வதற்காக கமநல அபிவிருத்தி பிரதி ஆணையாளர் அலுவலகத்திற்கு ரூபா 256,965 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த மென்பொருளைப் பெற்று பயன்பாட்டுக்கு எடுக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் பயன்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது என அறியத்தருகின்றோம் | மென்பொருளைப் பெற்று பயன்படுத்துதல் வேண்டும். |
| (கு) | ஹிங்குரான கமநல சேவைக் குழுவில் முன்னாள் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் இருந்து அறவிட வேண்டியதாக 2013 ஆம் ஆண்டு முதல் கணக்குகளில் முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 240,470 தொகையை அறவிடுவதற்கு எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2013 ஆம் ஆண்டு முதல் கணக்கு அறிக்கைகளில் முன் கொண்டுவரப்படுகின்ற ரூபா 240,470 தொகையை அறவிடுவதற்காக இதுவரை ஆரம்ப விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | தேவையான நடவடிக்கைகள் விரைவாக எடுத்தல் வேண்டும். |
| (கூ) | 2017 ஆம் ஆண்டின் போது சம்மாந்துறை பொலிஸ் இன் பொறுப்பில் காணப்பட்ட உரம் மூட்டைகள் 235 மல்வத்த கமநல சேவைக் குழுவிற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த உர இருப்பு கமநல சேவைக் குழுக்கள் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக எந்த ஒரு நடவடிக்கைளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இந்த உர இருப்பு களஞ்சியத்தில் இருந்து அகற்றுவதற்குத் தேவையான அங்கீகாரம் கோரி கமநல சேவைகள் பிரதி ஆணையாளருக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | காலாவதியான இருப்புக்களை அகற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்படல் வேண்டும். |

**3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பல்லன் ஓயா கமநல சேவைக் குழுவிற்கு உரிய மொத்த வயற்காணிகளின் அளவு 5,268 ஏக்கர் ஆக இருந்த போதிலும் வயல் காணிகளின் பெயர்ப் பதிவேட்டில் 3,364 ஏக்கர் மாத்திரம் உள்ளடக்கப் | பதிலளிக்கப்படவில்லை. | மொத்த வயற் காணிகளின் அளவு வயல் காணிகளின் பெயர்ப் பதிவேட்டில் உள்ளடக்குதல் வேண்டும். |

பட்டிருந்தது.

**3.4 விளைவற்ற அல்லது குறைவாகப் பயன்படுத்தப்பட்ட ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டின் போது 03 கமநல சேவைக் குழுக்களுக்கு கிடைத்திருந்த ரூபா 10,000,000 பெறுமதி உடைய வேளாண்மை நட்டும் இயந்திரங்கள் 10 மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 03 வருடங்கள் அளவிலான காலம் பயன்பாட்டுக்கு எடுக்கப்படாமல் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தது. | உலக வங்கி உதவியின் கீழ் கிடைக்கப் பெற்ற நாற்று நடும் இயந்திரங்களைப் பயன்படுத்தி 2023/24 பெரும் போகத்தில் மாதிரி நெற் பயிர்ச் செய்கை ஒன்று கமநல சேவைக் குழுவினால் மேற்கொள்ளப்பட்டதுடன் அதன் போது அந்த நாற்று நடும் இயந்திரங்களில் நாற்று நடும் இடைவெளி அதிகரித்தமையினால் பயிர்ச் செய்கை நடவடிக்கைகளில் நட்டம் ஏற்படுவதாக இனங்காணப்பட்டிருந்தது. அந்த நாற்றுக்களுக்கு இடையிலான இடைவெளி அதிகரித்தமையினால் அந்த இயந்திரங்களைப் பயன்படுத்தி பயிர் செய்கை செய்வதற்கு பிரதேசத்தின் விவசாயிகள் அதிக விருப்பம் காண்பிக்காதிருந்ததை தயவுடன் அறியத் தருகின்றோம். | அந்த இயந்திரங்கள் உரிய பணிகளுக்காக பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | தெஹியத்தகண்டி கமநல சேவைக் குழுவிற்கு சொந்தமான வாகனம் மற்றும் 17 இயந்திர உபகரணங்கள் மீளாய்வாண்டின் இறுதி வரையில் 02 வருடங்கள் முதல் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தில் இருந்து பயன்படுத்தப்படாமல் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | இந்த இயந்திர உபகரணங்களை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு பொருத்தமானது என பொருள் மெய்மையாய்வு சபையின் மூலம் பரிந்துரை செய்யப்பட்டிருந்த போதிலும் இதுவரை அனுமதி | சொத்துக்களைப் பழுதுபார்த்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ அல்லது அவ்வாறு இல்லையாயின் முறையான பிரகாரம் விற்றுத் தீர்ப்பதற்கோ தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அதனால் பயன்படுத்த முடியாத வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களை விற்றுத் தீர்ப்பதற்கும் பழுது பார்க்கக் கூடிய வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களை பழுது பார்த்து பயன்பாட்டிற்கு எடுப்பதற்கும் குழு கவனம் செலுத்தியிருக்கவில்லை. | கிடைத்திருக்கவில்லை. | |
| (இ) | 03 கமநல சேவைகளுக்கு மாவட்ட அலுவலகத்தால் 2004 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த 19 தண்ணீர்ப் பம்பிகள் நீண்ட காலம் முதல் பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்படுகின்றது. | ஏலத்தில் விற்பனை செய்வதற்கு கோரப்பட்டுள்ளது. | சொத்துக்களை உரிய பிரகாரம் பயன்பாட்டிற்கு எடுப்பதற்கோ அல்லது அவ்வாறு இல்லையாயின் முறையான பிரகாரம் விற்றுத் தீர்ப்பதற்கோ தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | மல்வத்த கமநல சேவைக் குழுவிற்கு உரிய ரூபா 647,000 பெறுமதியான 04 கை உழவு இயந்திரங்கள் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் பயன்படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | 04 கை உழவு இயந்திரங்களை ஏலத்தில் விற்பனை செய்வதற்கு கோரப்பட்டுள்ளது. | மேற்படி |
| (உ) | 15 கமநல சேவைக் குழுக்களுக்குச் சொந்தமான கூட்டுப் பசளை கூறுகளாக்கும் 15 இயந்திரங்கள் பயன் படுத்தப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | உரிய நிறுவனங்களுக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | மேற்படி |

### 3.5 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 13 கமநல சேவைக் குழுக்களின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்களில் 13 வெற்றிடங்கள் காணப்பட்டது. | இந்த வெற்றிடங்களை எதிர் காலத்தில் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்காக 14 கமநல | மிகையானதாகக் காண்பிக்கப்பட்டுள்ள | வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மற்றும் |

| | | | |
|---|---|---|---|
| | சேவைக் குழுக்களில் 34 உத்தியோகத்தர்கள் மற்றும் மாவட்ட அலுவலகத்தில் 03 உத்தியோகத்தர்கள் ஆக 37 உத்தியோகத்தர்களில் வெற்றிடங்கள் காணப்படுவதுடன் ஏனைய குழுக்களில் 30 உத்தியோகத்தர்கள் மிகையாகக் காணப்பட்டனர். | உத்தியோகத்தர்கள் சகலரும் தமிழ் மொழி உத்தியோகத்தர்களாக இருந்தமையால் வெற்றிடங்கள் காணப்படுகின்ற சிங்கள மொழி கமநல சேவைக் குழுக்களில் கடமைகளுக்காக நியமிக்க முடியாதுள்ளது. | மிகையான உத்தியோகத்தர்களை ஏனைய நிறுவனங்களுக்கு நியமிப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 29 கமநல சேவை குழுக்களுக்கு உரிய கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகள் தவிர 04 பதவி தொகுதிகளுக்காக 07 உத்தியோகத்தர்களின் மிகையும், 118 உத்தியோகத்தர்களின் வெற்றிடமும் காணப்பட்டது. | அந்த பதவிகளுக்கு உரிய ஆட்சேர்த்தல் கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்றமை யால் திணைக்களத்தின் மூலம் மீண்டும் அந்த பதவிகளுக்கு உத்தியோகத்தர்களை சேர்க்கும் சந்தர்ப்பத்தில் இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பதவியணியினர் வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மிகையான ஊழியர் எண்ணிக்கையை அங்கீகரித்துக் கொள்வதற்கோ அல்லது மாற்றங்களை வழங்குவதற்கோ நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | கமநல அபிவிருத்தி மாவட்ட அலுவலகத்தில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் பிரகாரம் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகள் தவிர ஏனைய 04 பதவிகள் தொடர்பாக 06 உத்தியோகத்தர்களின் வெற்றிடங்கள் காணப்பட்டது. | இந்த பதவி வெற்றிடங்கள் தொடர்பாக அரச நிர்வாக அமைச்சு மற்றும் கமநல அபிவிருத்தித் திணைக்களம் என்பவற்றுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | பதவியணியினர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. கமநல வங்கிகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2012 பெப்ரவரி 29 ஆம் திகதிய இலக்கம் 2012/04 என்ற கமநல அபிவிருத்தித் திணைக்கள சுற்றறிக்கையின் இலக்கம் 1.6 பிரிவின் பிரகாரம் கிராமிய விவசாய மக்களின் வாழ்வாதார நிலைமையை அபிவிருத்தி செய்வதை நோக்காகக் கொண்டு கமநல சேவைக் குழுக்கள் கமநல வங்கியினை முறையாக நடாத்திச் செல்ல | எதிர் காலத்தில் செயற்படு நிலைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் விவசாயிகளுக்கு சலுகை வழங்குவதற்காக கடன் பெற்றுக் கொள்வதற்கு கமநல வங்கிகளை செயற்படு நிலைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டியிருந்த போதிலும் 11 கமநல சேவைக் குழுக்களால் 2009 ஆம் ஆண்டின் பின்னர் விவசாய மக்களினால் வைப்புச் செய்யப்பட்ட பணம் சேகரிக்கப்பட்ட போதும் கடன் வழங்கல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயத்தின் 2012 பெப்ரவரி 29 ஆந் திகதி இலக்கம் 2012/04 என்ற கமநல அபிவிருத்தித் திணைக்கள சுற்றறிக்கையின் இலக்கம் 2.6.2(vii) பந்தியின் பிரகாரம் விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர்களால் பிரதேசங்களில் உள்ள விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டுள்ள கடன் கால நேரத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்காமையினால் 19 கமநல சேவை நிலையங்களுக்கு உரியதாக 1999 சிறு போகத்தில் இருந்து 2023 சிறு போகம் வரை ரூபா 25,170,644 காலாவதியான கடன் மற்றும் வட்டி தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவைக் கடனை எதிர் காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | காலாவதியான கடன்களை அறவிடுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | மத்திய முகாம் கமநல வங்கியினால் 2003 ஆம் ஆண்டு முதல் 2005 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் விவசாயிகளிடம் இருந்து கடனை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக நிதிப்பிரமாணம் 104 இன் பிரகாரம் உரிய உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய பணத்தில் ரூபா 261,228 தொகை 2024 யூன் 18 கணக்காய்வுத் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்க வில்லை. | இது தொடர்பாக பிரதான அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | முறையான பரிசோதனை ஒன்று மேற்கொண்டு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களிடமி ருந்து உரிய பணத்தை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2004 ஆம் ஆண்டில் உஹன கமநல சேவைக் குழுவின் நிலைய முகாமையாளராக சேவையாற்றி தற்போது ஓய்வு பெற்றுச் சென்றிருக்கின்ற உத்தியோகத்தரிடம் இருந்து 20 வருட அளவிலான காலத்தில் இருந்து அறவிட வேண்டிய ரூபா 106,247 தொகையை அறவிடுவதற்காக எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2004 ஆம் ஆண்டில் முன்னாள் நிலைய முகாமையாளராக சேவையாற்றிய திருமதி. ஆர். ரஞ்சனி பெரேரா அவரிடம் இருந்து அறவிட வேண்டிய மிகுதித் தொகையான ரூபா 106,247 தொகையை அறவிடுமாறு 2024 ஆம் ஆண்டில் கமநல அபிவிருத்தி பிரதி ஆணையாளருக்கு கடிதம் ஒன்றின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. | நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | மாயாதுன்ன கமநல சேவைக் குழுவில் முன்னாள் இருந்த கமநல சேவைக் குழுவின் எழுதுவினைஞரிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 39,834 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | உரிய பணத்தை அறவிடுவதற்கு விரைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | மாயாதுன்ன கமநல சேவைக் குழுவின் சித்தம்ம விவசாய கடன் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அதற்கு தொடர்புடைய அங்கத்தவர்கள் இருவரிடம் இருந்து அறவிட வேண்டிய வட்டியுடன் கடன் தொகையான ரூபா 112,360 அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | கடன் நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக உள்ள அங்கத்தவர்களிடம் இருந்து அறிவிடுவதற்கு தற்போது மீள் நினைவூட்டல் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. | உரிய அங்கத்தவர்களிடம் இருந்து பணத்தை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்படல் வேண்டும். |
| (எ) | மாகாஓயா கமநல வங்கியில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் முதல் நிதிக் கூற்றுக்களில் முன் கொண்டு வரப்படுகின்ற ரூபா 634,308 பெறுமதியான கிடைக்க வேண்டிய செயற்பாடற்ற கடன் மீதி மற்றும் ரூபா 599,527 பெறுமதியான செலுத்த வேண்டிய சுழற்சி நிதி என்பவற்றைத் தீர்த்து வைப்பதற்காக நடவடிக்கை | சுழற்சி கடன்களை பதிவளிப்பதற்கு பிரதான அலுவலகத்தில் இருந்து கோரப்பட்டுள்ளது. | சுழற்சி நிதியக் கடன் மீதியைத் தீர்த்து வைப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் விரைவாக எடுக்கப்படல் வேண்டும். |

எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | மகாஓயா கமநல வங்கியில் பங்கு, வைப்பு, குழு வைப்புக்கள், மற்றும் கமநல அபிவிருத்தி வைப்புக்கள் தொடர்பாக கணனி மயப்படுத்தப்பட்ட தகவல் முறைமையுடன் ஒப்பிடும் போது பங்குகள் மற்றும் வைப்பு பேரேடுகள் நாளது வரையாக பேணிச் செல்லப்படாது இருந்ததுடன் கணக்காய்வுத் திகதி வரையிலும் அந்த தகவல்களை உள்ளடக்கிய கணனி செயலிழந்தமையின் காரணமாக மீளாய்வாண்டில் வட்டி கணிப்பிடுதலை உள்ளடக்கிய பங்குகள் மற்றும் வைப்பு மீதிகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்த முடியாதிருந்தது. | எதிர்காலத்தில் பங்குகள் மற்றும் வைப்பு பேரேடு சரியாக பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணனி மயப்படுத்தப்பட்ட தகவல் முறைமையுடன் ஒப்பிடும் போது பங்குகள் மற்றும் வைப்புப் பேரேடு சரியாக பேணிச் செல்லப்படல் வேண்டும். |
| (ஐ) | நாமல்தலாவ கமநல சேவைக் குழுவிற்கு கமநல அபிவிருத்தித் திணைக்களத்தால் 2021 ஒக்தோபர் 27 ஆந் திகதிய இலக்கம் 2021/16 என்ற சுற்றறிக்கையின் பிரகாரம் காலாவதியான கடன்களுக்கான வட்டி கணிப்பிடல், கணக்கீடு செய்தல் மற்றும் அறவீடு செய்தல் என்பவற்றுக்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. | பதிலளிக்கப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் கடன்களுக்கான வட்டி கணிப்பிடல், கணக்கீடு செய்தல் மற்றும் அறவிடுவதற்கு உரிய முறையாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஒ) | நாமல்தலாவ கமநல வங்கியால் 2003/2004 பெரும் போகத்தில் இருந்து 2004/2005 பெரும் போகம் வரை நாமல்தலாவ கமநல சேவை நிலையத்தில் சேவையாற்றிய கமநல ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளருக்கு நெல் சேகரிக்கும் கடன் வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த உத்தியோகத்தரிடம் இருந்து நிலுவைக் கடன் மற்றும் வட்டி ரூபா 97,500 அறவிடுவதற்கு 2024 யூலை 26 ஆந் திகதி | பதிலளிக்கப்படவில்லை. | முறையான பரிசோதனை ஒன்று மேற்கொண்டு பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரிடம் இருந்து உரிய பணத்தை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் விரைவாக எடுத்தல் வேண்டும். |

வரையிலும் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தரால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.